## கொரோனாவுக்கு பிறகு அதிகரிப்பு

# மெட்ரோ ரெயிலில் ஒரேநாளில் 1.40 லட்சம் பேர் பயணம்

சென்னை, பிப். 15–

சென்னை மெட்ரோ ரெயில் முதல்கட்ட விரிவாக்க திட்டப்பணிகள் முழுமையாக நிறைவடைந்து பொது மக்கள் சேவைக்கு நேற்று தொடங்கி வைக்கப்பட்டது.

### விரிவாக்கம்

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் வரை புதிய வழித்தடத்தில் சேவை தொடங்கியதை தொடர்ந்து 45 கிலோ மீட்டர் தூரம் பயணம் மேற்கொள்ளலாம்.

பிரதமர் மோடி புதிய வழித்தடத்தில் சேவையை தொடங்கியதை யொட்டி நேற்று பகல் 2 மணி முதல் இரவு 11 மணி வரை கட்டணம் இல்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

அதிகாலை 5.30 மணி முதல் 2 மணி வரை கட்டணம் வசூலிக்கப்பட்டது. கொரோனா பாதிப்புக்கு பிறகு நேற்று தான் அதிகபட்சமாக ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்துள்ளனர்.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

### வழிகாட்டு நெறிமுறைகள்

கொரோனா தொற்று பரவல் காரணமாக மார்ச் மாதம் இறுதியில் சேவை நிறுத்தப்பட்டது. 5 மாதத்துக்கு பிறகு செப்டம்பர் 7–ந் தேதி மீண்டும் சேவை தொடங்கியது. ரெயில்கள் குறைந்த அளவில் இயக்கப்பட்டன. ரெயில்கள் மற்றும் நிலையங்களில் கொரோனா தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுகின்றன.

தொடக்கத்தில் பயணிகள் குறைந்த அளவிலேயே பயணம் செய்தனர். நாளடைவில் இந்த எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்தது. 20 ஆயிரம், 25 ஆயிரம், 50 ஆயிரம் என உயர்ந்து வந்த நிலையில் நேற்று இலவச பயணத்துக்கு பிற்பகல் அனுமதிக்கப்பட்டது.

### 1.40 லட்சம் பேர்

இதையடுத்து அதிகபட்சமாக 1.40 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். சேவை முழுமையாக தொடங்கி இருப்பதால் 2 லட்சம் பேர் வரை பயணிப்பார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

கூட்ட நெரிசல் மிகுந்த நேரத்தில் 5 நிமிடத்துக்கு ஒரு ரெயிலும், நெரிசல் இல்லாத நேரங்களில் 10 நிமிடத்துக்கு ஒரு ரெயிலும் இயக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.